உ

கடவுள் துணை

மனுச்சோழன் சரித்திரமென்னும்

வீ[illegible]விடங்கன் தம்பி

இஃது [illegible] செய்து

[illegible] முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

முதற் பதிப்பு.

ஆதிபுரி

இரத்தினவேலுமுதலியாரது

வாணிவிலாஸஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

காப்பிரைட் ரிஜிஸ்டர்டு.

இதன் விலை அணா - 2.

சென்னை நாராயணமுதலி வீதி 52-வது நெ-வீடு.

உ

கடவுள் துணை

மனுச்சோழன் சரித்திரமென்னும்

வீதிவிடங்கன் கும்மி

[illegible] செஞ்சி

ஏகாம்பரமுதலியாரவர்கள்

இயற்றப்பட்டு,

முதற் பதிப்பு.

ஆதிபுரி

இரத்தினவேலுமுதலியாரது

வாணிவிலாஸஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

Copy-Right Registered.

இதன் விலை அணா-2.

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெ-வீடு,

OFFICE OF THE ... REGISTE... 20 JAN

894.811 1419

உ

கடவுள் துணை.

மனுச்சோழன் சரித்திரமென்னும்

வீதிவிடங்கன் கும்மி.

விநாயகர் காப்பு.

வெண்பா.

[illegible]திமனுச் சோழ[illegible] ரருந்தவத்தி[illegible] வந்துதித்த
வீதிவிடங் கனென்னும் வேந்த[illegible] நீதிபுகழ்
சரித்திரத்தை கும்மியதாய்ச் [illegible] வாணி[illegible]ருள்
கரித்திருநத் கணபதிதா — க[illegible]

சரித்திர வரலாறு,

கும்மி.

ஆதிகணபதி தாளினையேநிதம்
ஆற்சித்துபூஜி[illegible] தடிபணிந்து
வீதிவிடங்கன் சரித்திரகும்மிக்கு
விள்ளதேசிகனருள் காப்பாமே.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி இந்த
குவலயமெங்கும் புகழும்படி
செம்மலர்செஞ்சி யேகாம்பரன்கவியும்
சேகதநில்விளங்கவே கும்மியடி

அந்தத்திலமிக்க வதிரூபமிகும்
ஆனந்தம்மாள்குண கியானம்மாள்
சொந்தமதாகிய சொர்னம்மாள்கை
சோரவேகொட்டியே கும்மியடி.

சிங்காரவல்லி சுமுகவல்லிநல்ல
லங்காரவல்லி கதம்பவல்லி
பொங்கானவல்லி குதம்பவல்லியிந்த
போகவல்லிதிரு மோகவல்லி

மங்களவல்லி [illegible]னவல்லிசெழுங்
குங்குமவல்லி கனகவல்லி
[illegible]ங்குபுஷ்பவல்லி யேகவல்லிநீங்கள்
எல்லோருங்கூடியே பாடுங்கடி

தேனேசிர்சோ[illegible] [illegible]த்திமேலநல்ல
திருவாரூரென்னும் [illegible]கரை

O-, 85 MEM, M
No 7
118295

மாநேமனுச்சோழன் நீதிவழுவாமல்
மங்கையையாண்டு வருகையிலே ௬

மாதமும்மாரி பொழிந்திடுமாமிந்த
மாணிலமெங்கும் செழித்திடவே
ஓதமேவுற்பல தானியம்யாவுமே
ஓங்கிப்பெருகி விளைந்திடுமாம் ௭

குடிகள்மனத்துக் கோணாமல்நாளுங்
குற்றங்குறைகளும் வாராமல்
படிதனிலுள்ளவர் பண்பாய்புகழ்ந்திட
பாரனையாண்டு வருகையிலே ௮

உத்தமமனுமனு சோழரவர்க்குமே
உதவியாயபின்னரசனுதற்கு
புத்திரனில்லையென் றெமனம்வாடியே
பூபனும்நொந்து மிகவருந்தி ௯

விந்தையதாகவே சந்ததிபெறவே
வேந்தனுமப்போ யபேட்சைகொண்டு
அந்தம்தாகவே யருபதுவருஷமும
அநேகமாந்தான தருமங்களும் ௰

யாகமதாகவே யாகங்களும்நல்ல
பண்புள்ளவேண விரதங்களும்
ஏகமனதா யிருந்துபுரிந்திட
ஈஸ்வரன்தன்னுடைக் கிருபையினால் ௧௧

அன்னவருடைய மனைவியின்கர்ப்பத்தில்
அன்பாய்புத்திரன் தான்பிறக்க
மன்னவன்கண்டு மனமகிழ்ந்துமப்போ
மறையோர்தங்களை தானழைத்து ௧௨

சாதகமெழுதி நாமகரணமும்
சாற்றுவீரென்ன யவர்களப்போ
வீதிவிடங்க னெனபெயரிட்டெல்லோ
வேதியராசீர் வதித்துச்சென்றார் ௧௩

அந்தப்புத்திரன் நாளொருமேனியாய்
அகிலம்புகழவே தான்வளர்ந்து
விந்தையதாகவே வேதங்கள்சாஸ்திரம்
வேணஸ்மிருதிப் புராணங்களும ௧௪

ஆனையேற்றமோடு குதிரையேற்றம்நல்ல
அருமையுள்ளரதா ரோகணமும்
மோகனவில்வித்தை வாள்வித்தையோடுமே
மகேந்திரயிந்திர ஜாலங்களும் ௧௫

இதுமுதலான யிவ்விதவித்தைகள்
ஒன்றுங்குறையிலா கற்றுகொண்டு
ஆதிசேடனைபோ லறிவுங்காமனைபோல்
அழகுமான்சிங்கம் போலாண்மையுமாய் ௧௬

மதயானைபோலவே நன்னடையும்நல்ல
மார்த்தாண்டனைப்போலே வரப்பங்களும்
விதவிதமாகவே கற்பகவிருட்சம்போல்
விளங்கியகுடையு முடைமையவனும் ௧௭

பொறுமையுமன்பு மிரக்கமொழுக்கமும்
போற்றுமாசாரமுஞ் சாந்தங்களும்
அறுமையதானதோர் சர்ச்சனர்நேயமும்
ஆனமுதலான நற்குணமும் ௧௮

தன்னுயிர்போம்படி குற்றங்கள்நேரினும்
தானவனுண்மையே பேசுதலும்
அன்னைப்பிதாக்கள் மனக்குறிப்பறிந்து
அவர்களினிச்சையைப் போல்நடந்தும் ௧௯

கண்டோர்யாவருங் கொண்டாடபுகழ்
காதினில்கேட்டோர் மனங்களிக்க
பண்டாயிளவர சாளப்பருவமாய்ப்
பக்குவமாகவே தானிருந்தான் ௨௦

வீதிவிடங்கனென்னும் ராஜபுத்திரன் தியாகராஜப்பெருமானை
தேறிசிக்க தேரேறிச்செல்லல்.

இப்படியாக யிருக்குமோர்நாளிலே
இன்பமாய்வீதி விடங்கனுமே
அற்புதமானக் கமலாலயந்தினில்
அன்பாய்விளங்குந் தியாகரையும் ௨௧

தெரிசிக்கயோர்மன தாகவுமேயன்று
தானவர்தேரின்மே லேறிக்கொண்டு
ஒருமிக்கதேரை நடத்தும்படியாக
உத்திரவுமவர் செய்தவுடன் ௨௨

பாகனுந்தேரை நடக்கையிலேயப்போ
பரிகளுந்தெய்வத்தின் வசமாகி

வேகமாய்த்தேரை யிழுத்துக்கொண்டுமந்த
வீதிகடுவோடி வருகையிலே ௨௩

அந்தக்ஷணத்தில் ஆவுடன்கன்றுமா
அவ்வழியாக வருகையிலே
விந்தையாகவே யக்கன்றுமப்போது
[illegible]மாய் முன்னேறிடத்தான்வருக ௨௪

இளங்கன்றுடைய அறியாதென்றுமுன்னோர்
இயம்பும்பழமொழி யின்படியே
வளமாய்த்துள்ளிக் குதித்துக்கொண்டப்போ
வருகுமேற்தேரி னெதிரேயங்கு ௨௫

ஒருவர்கண்ணுக்குந் தோற்றாதங்கு
உற்றஜனங்க ளறியா மற்
பெருகுமூழ்வினையால் கன்றமாய்கின்று
போயதேலோதேர்தி னுள்புகா ௨௬

அப்போததிவேக மாகவேசெல்கின்ற
அத்தேரின்சக்கர மாமதினில்
தப்பிதமாக வகப்பட்டிறப்பட்டு
தானுடல்நொறுங்கி குடல்சரிந்து ௨௭

உயிரதுநீங்கியே கன்றுகடந்திட
உற்றதொரிச்செய்தி தன்னையுமே
பையவீதி விடங்களுங்கேட்டல்லோ
பதறியேமெய்யும் நடுங்கிக்கி ௨௮

தேர்மேலிருந்தவன் கீழேவிழுந்துமே
தம்பியேயென்றென்று அன்புமொடு
ஆரா துயர்கொண்டு யவனுமெழுந்தப்போ
அக்கன்றினருகினில் போய்பார்த்து ௨௯

சிந்தைகலங்கியே வீதிவிடங்களும்
சிறுதுநேரமூர்ச்சை யாயிருந்து
அந்தவேளையினில் மூர்ச்சை தெளிந்தபின்
அழுதுபுலம்பியே யேதுசொல்வான் ௩0

சோதிபெருமிந்த சூரியகுலத்திற்கு
ஆதியாகுமனு வென்பவரும்
நீதியாய்வந்தவர் யவர்க்கும்பின்வழியாய்
இறைகுலோத்துங்க சோழனவர் ௩௧

கன்னுந்திருநீற்று சோழனுடனல்ல
காவிரிகரைகண்ட சோழனுமே
டன்னனுமனுநீதி சோழனுடனின்னம்
மாராஜேந்திர சோழனவர் ௧௨

க... னராஜராஜ சோழனல்லக்
... றையூர்ச் சோழருடன்
... லந்தச்சோழன் காவைகொண்ட சோழன்
ம... சிறை மீட்ட சோழன் ௧௩

... ண்டசோழனந்த
... மாசோழன்
வ... ழன்செய்மெ ...ரிசோழன்
வரிய... ன பரும ௧௪

எ...க்குமூதர்... எ யிருந்தமு...ன்னும்
ஏதொருதீமையும் சேராமல்
தன்க்குள்நீதிய தா வெசெங்கோலும்
தா... த்திரிய வந்ததெல்லாம் ௧௫

இக்காலத்தினி லென்றலுமல்லோ
எல்லாமழிந்துமே போகும்படி
துக்கமாகவந்து நேரிட்டதேஜயோ
தொல்லையினைதயானு மெணனும்போது ௧௬

குலத்தைகெடுக்கவே வந்ததொருபொல்லா
கோடாலிகாம்புமே யானுமேனன்
நலத்தைகெடுக்கவே நான்பிறந்தேனென்று
நாணியேவீதி விடங்கனப்போ ௧௭

வந்தவழியே ரதத்தைதிருப்பிப்பின்
வாகாய்வீதி யரிந்துசொல்லும்
விந்தையுள்ளப்பெரியோர்களிடத்திற்கு
வேந்தன்குமாரனுஞ் சென்றனனே ௧௮

பசுகன்றைகண்டு புலம்பல்,

இப்படியாகவே சென்றபின்புயங்கே
இறந்துகிடக்குமோர் கன்றருகே
கொப்பனதாய்பசு வந்துபார்த்துமல்லோ
குலைகுலைந்துமப்போ நடுநடுங்கி ௧௯

தேர்க்காலில்பட்டு மயந்தாயோ மப்போ
தேங்கியேயென்ன கிடாந்தாயோ

பார்க்கவேயெந்தன் மைந்தனைப்போனவையோ
பற்றியெறியுதே யென்னசெய்வேன் ௪௰

ஆவியுமுன்னைவிட் டேகினதேயுன்
னங்கமுங்குழம்பியே கிடக்கிறதே
பாவியென்வயற்றில் நெருப்பைவைத்துநீ
பரலோகம்போயினி சேர்ந்தாயோ ௪௧

என்றல்லோடவுங் கண்ணீர்விட் டேவிம்மி
ஏங்கிக்கதறிப் புரண்டழுது
சென்றுமனுச்சோழச் சக்ரவர்த்திபாற்
சேதியறிவிக்க வேணுமென்று ௪௨

குடிகளுக்கோர்குறை யறிவிக்கலத்தில்
கொற்றவனுக்கு அறிக்கைசொல்ல
வடிவாய்வாயலில் கட்டியிருக்கின்ற
வாராட்சிமணிதனை யப்பொழுது ௪௩

கொப்பெனயப்பசு வந்துமல்லோதன்
கொம்பினாலாட்டி மணியதனை
அப்போதுகணகண வென்றுவோசையிட
அதிகவிசையா யடித்ததுவே ௪௪

அப்போதுசபா மண்டபந்தன்னிலே
அமச்சர்முதலானோர் புடைசூழ
செப்பமுடன்சிங்கா தனத்தின்மீதுவல்லோ
சீராகத்தானுமே வீற்றிருந்த ௪௫

மனுச்சக்ரவர்த்தியு மானவருமந்த
மணியதினோசையைத் தான்கேட்டு
வினையிதென்னமோ வென்றுதிடுக்கிட்டு
வேந்தனுமப்போ தாலோசித்து ௪௬

அரசன்கொலுவைவிட் டேயெழுந்துமப்போ
அரண்மனைவாசலுக் கேகுமுன்னும்
வரியவிச்செய்தியை விண்டிடவஞ்சின
வமச்சனுங்கண்டு மிகபயந்து ௪௭

இச்சேதிதன்னை மறைத்தாலும்நாம்
இன்னொருவரால் வெளிப்படுகும்
அச்சேதியரசனுங் கேள்வியுற்றால்நமக்
காகாபெருந்தப்பு நேர்ந்திடுமென் ௪௮

ஆகையால்நாமு மறிந்துமட்டுமிப்போ
அரசனிடத்தினிற் சொல்வோமென்று
தாகமதாகவே தாளில்பணிந்துமே
தலைவனேகேளுமென் றேதுரைப்பான் ௪௯

மன்னனேயுமது புத்திரனுமின்று
மாரதமேறியே செல்கையிலே
பன்னியயந்தத்தேர் சக்கரத்திலோர்ப்
பசுங்கன்றகப்பட் டிறந்ததுவே ௫௦

அந்தகற்கன்றை மீன்றபசுவந்து
அதனையும்பார்த்துத் துயரமுற்று
விந்தையாயாராட்சி மணியை யசைத்தது
வேந்தேயிதுசேதி யென்றுசொல்ல ௫௧

அம்மொழிமன்னவர் தான்கேட்டவுடன்
அரியவிடந்தலைக் கேறினாற்போல்
கம்பிதமோடுக் கலங்கியேயானமும்
கழரோணைவதனை யுமடைந்து ௫௨

அஞ்சுபுலனு மறிவுங்கலங்கியே
பஞ்சபிராணனும் பதைபதைத்து
துஞ்சவேமூர்ச்சை யடைந்தோர்வேந்தனை
தூக்கியமைச்ச னுபசரிக்க ௫௩

அப்போதுமன்னனும் சோர்வுநீங்கியே
அக்கம்பதரவே யேதுரைப்பான்
இப்படிப்பட்டப் பழிக்காரப்பிள்ளையை
ஈசனெனக்கென யளித்தானே ௫௪

பிள்ளையென்னசெய்யும் பெருமானென்னசெய்வான்
போட்டவிதியும் விலகிடுமோ
உள்ளவிதிப்படி யாகுமென்றுமுன்னோர்
ஓதிடும்வாக்கியந் தப்பாது ௫௫

மாதாபிதாக்கள்செய் நன்மைதுன்மைகளு
மக்களுக்கென்றுப் பெரியோர்கள்
ஏதவேசொல்லுற வார்த்தையின்படியே
என்சுதனுக்கு நேரிட்டதென்று ௫௬

என்னைவெறுத்துமே கொள்ளாமலென்றாலும்
இந்தபிறப்பி லெனக்குபுத்தி

கன்னமாகவே வஞ்சோரன்முகமாய்
காவென்றுதீங்குமே செய்தறியேன் ௩௭

தொல்லுயிர்ப்பிறப்பி லில்லாமற்போனாலும்
சோர்வதாகமுன் பிறப்பினிலே
நல்லோர்மனத்தையும் நடுங்கவேசெய்தேனோ
நாடியேயவர வழக்கிட்டேனோ ௩௮

தானங்கொடுப்போரை தடுத்துமேநின்றேனோ
தக்கநேசத்தைக் கலைத்தேனோ
மானங்கெடுத்து மனமொத்த நட்புக்கு
வஞ்சகமேதனுஞ் செய்தேனோ ௩௯

குடிக[illegible]யுயர்த்திமே[illegible]ன்னையாண்டேனோ
குற்றமாமேமனமுன் பகைவ[illegible]னோ
படியினில்தருமமற்ற பாராடல்வினை
பழியாகதண்டங்கள் செய்தேனோ ௪௦

மன்றேறப்பேசியே வாழ்வையழித்தேனோ
மாகுலயோர்களை மன்னித்தேனோ
கன்னக்களவுகள் செய்வோர்க்குமுன்
காணவுறவுகள் சொன்னேனோ ௪௧

ஆசைவார்த்தைசொல்லி மோசங்கள்செய்தேனோ
அரும்பொன்னுக்கிச்சித்து பொய்சொன்னேனோ
பாசமாய்நடக்கும் வழியையடைத்தேனோ
பசித்தோர்முகம் பார்த்திருந்தேனோ ௪௨

ஊரவேலையிட்டு கூலிகுறைத்தேனோ
இரப்போர்க்குபிச்சை யில்லையென்றேனோ
கூராகக்கோள்சொல்லி குடும்பங்கலைத்தேனோ
குருவைவணங்கிடக் கூசினேனோ ௪௩

காணநட்டார்த்திர்க்கை நழுகவேவிட்டேனோ
கலங்கியொளித்தோரை காட்டினேனோ
பூணவேபெரியோர்கள் பாடியபாட்டிற்கு
பிழையதுசொல்லித் திரிந்தேனோ ௪௪

குருவின்காணிக்கையை கொடுக்கமறந்தேனோ
கூர்மையாய்க்கற்றோரை றக்கழந்தேனோ
பரக்கின்றபட்சியை பிடித்துமேகூண்டினில்
[illegible]தைக்கவேபடைத்துமேவைத்தேனோ ௪௫

கல்லையுநெல்லையுங் கலந்துமேவிற்றேனோ
கன்றுககுபால் விடாக்கரந்தேனோ
நில்லவுன் சுவையுண்டு உடலைவளர்த்தேனோ
நீருள்ளகுளத்தையுந் தூற்றேனோ ௬௯

அன்புகள்செய்வோர்க்கு துன்பங்கள் செய்தேனோ
அயலார்பயிரை யழித்தேனோ
பண்ப ய்வெய்ப லுக் கொதுக்கும்விருட்சத்தை
பரவயால் ...வே வெட்டினேனோ ௬௭

ஆம்பொதுயவ்விடபந் தன்னைப்பிடித்தேனோ
ஆலயககதவை யடைத்தேனோ
தாம்சிவனடியாரை சிரி யனவே...னோ
தபசியைதாழ்வுகள் சொன்னேனோ ௬௮

சுத்தஞானிகளை தூஷணஞ்செய்தேனோ
பெற்றதாய்தந்தை சொல்கடந்தேனோ
சித்தமுள...தெய்வம் தன்னையுமிகழ்ந்து
செருக்குமடைந்து யிருந்தேனோ ௬௯

என்னபாவங்களை செய்தேனோவையோ
ஏதொன்றும் யானுமறியேனே
அன்னிதமாகவே செங்கன்னைநவீதியில்
ஐயோசிதைக்கவும் யான்கேட்டு ௭0

ஒருமித்திருந்தவென் செங்கோலையான்
ஓதுவேன்யென்ன கோலென்றுமே
குருடன்பிடிக்குங்கை கோலென்பேனோவலது
கொடுக்குங்கோலென்றுமே தான்சொல்வேனோ ௭௧

இப்படியாக மனுச்சோழனப்போ
ஏங்கிப்புலம்பி மிகவாடி
செப்பொணாதுயரங் கொண்டுமேமன்னனும்
சிந்தைக்கலங்கியே யேதுரைப்பான் ௭௨

என்னுடபுத்திரன் வதிரையேயுண்டியும்
என்னுடன்மனைய ருயிரினையும்
பன்னுமென்னாடு ககரமுடனின்னும்
பண்டுபண்டாரம் முதல்யாவும் ௭௩

இப்பவேகொடுத்து விட்டாலுமிந்த
இறந்தபசுக்கன்றி னுயிர்...ம்

கோப்பனையெழுப்பித் தருவேனென்றுயென்முன்
கூறுவாரானால் கொடுத்திடுவேன் ௭௪

அவ்வாறுசொல்லுவோ ரொருவருமில்லையே
ஐயோயிதற்குநா னென்னசெய்வேன்
எவ்வாறுபிழைக்கும் யென் துயர்நீங்கிடும்
ஈசனேயென்று மனுச்சோழன் ௭௫

கலகலவென்றுமே கண்ணில்நீர்பெருக
கதரிக்கதரி யழுது
பலபலவிதமாகப் பரதவித்து மல்லோ
பாராளும்வேந்தருந் தானிருந்தார் ௭௬

மந்திரிகள் அரசனுக்கு கூறல்.

அரசனழுகுங் குணம்பார்த்துமப்போ
அரிகிலிருந்த யமைச்சர்களும்
வரிசையாய்கைகுவித் தேதொழுதுமவர்
வாகாகமன்னனுக் கேதுரைப்பார் ௭௭

பதியேநீதி தவராதபெரும்
பாராளுமெங்கள் மகராஜனே
விதிவசத்தால்வந்து யிறந்ததோர்கன்றுக்கு
வேந்தே துயரப் படுவானேன் ௭௮

துன்பப்படுவதை விட்டெலவோநீரும்
துய்யவுயிற்குலே தானுமல்லோ
தம்மையறியாது நேரிட்டபோதினும்
தாமேபிரர்செய்யக் கண்டாலும் ௭௯

அதற்குதக்கதோர் சாந்திகள்தானல்லோ
அடவாகசொய்துமே கொள்ளவேண்டும்
விதிப்படியாக நேரிட்டுமேவந்த
வேந்தரேயிக்கன்றின் தன்குலேக்கு ௮௰

அரியமுன்னிலே யாகவிருந்ததோர்
அன்புள்ளவுமது புதல்வனேயும்
பெரியோர்களைக்கொண்டு யதற்குதக்கபடி
பிராயசித்தமதைத் தானறிந்தும் ௮௧

தககபடிக்குமே செய்யவேண்டுவது
தரணிபதியே யுமக்குமுறை
துக்கபடுவதி லாவதென்னவென்று
துலக்கவமைச்சர்கள் தானுரைக்க ௮௨

அம்மொழிகேட்டு மனுசக்ரவர்த்தியும்
அடங்காபெருங்கோபந் தானுகி
தம்மரிகில்நிற்கு மந்திரிமார்களை
தானவர்பார்த்துமே யேதுரைப்பார் ௮௩

இப்போதுயென்முன் னியம்பியனாயமும்
ஏர்க்கவேகன்று யிருக்கிறது
ஒப்பவேநீங்களு முறைத்தோர்நீதியும்
[illegible]நெக்கேனாய ம[illegible]தும்ப்பா ௮௪

தருமமீதவல[illegible] [illegible]ம்மதமாகுமோ
தயங்கியே [illegible]ைமயிழந்தழுகும்
அருமையுள்ளபசு சஞ்சல[illegible]தை[illegible]யனும்
ஆற்றுமோசொல்லு ம[illegible]ச்சர்களே ௮௫

இப்படிக்குநீங்கள் சொல்லுவதை [illegible]
என்முகம்ப[illegible]ர்த்து மே[illegible]கேளது
[illegible]மென்தன் [illegible]த்திரனுயிர்களு
தானுமிறங்கிய [illegible]தாவரியேன் ௮௬

அல்ல[illegible]வுங்கள் பிழைப்பையுமோசித்து
அரசன்[illegible]ன்னையென்று தானெண்ணியோ
சொல்ல[illegible]ந்தனு[illegible]ய மெதுகளைப்பற்றியோ
சோதனைகள்யாவு மேதறியேன் ௮௭

அகிலத்தை[illegible]ள யரசனுய்பிறந்தவன்
ஆசைகளைப்பற்றி யாவதுவே
வெகுளியைபற்றி யாவதுவும்வெகு
தாட்சண்ணிய[illegible]வைத்து நடப்பதுவும் ௮௮

[illegible]முறவின ருனைலும்நீதிக்
கொண்டுயே[illegible]நாயமும் சொல்லாமல்
மாறுபட்டா[illegible] மனைமறந்துவேக்தன்
மானியாகவே [illegible] ௮௯

அரசனுநம்மைபே [illegible]தால்லினைத்தாலும்
அதற்குமிணங்கியே [illegible]யிலையாய்
நெரியாகச்சொல்வது மதியுடையமந்திரி
நேர்மைதரும மதாயிருக்க ௯௦

அப்படிக்கல்ல[illegible]நீங்[illegible]ளிப்போது
அடவாகச்சொல்வது [illegible]மாதான் ।

மனுச்சோழசரித்திரமென்னும் ௪௰

செப்புங்கதிர்மதி திசையதுமாறினும்
சேரவேயாழி தடைமீறினும் ௪௧

மன்னுமகமேரு நிலையதுக்குலைந்தாலும்
மனதுகலங்காமல் ஞாயங்களில்
கன்னமாய்கூறுங் குணமுடையநீங்கள்
நவிலுவதேனின்று மிப்படியோ ௪௨

நீதியில்லாசில குரும்பரசரையும்
நேர்மையுடனல்லா தான்கூடி
போதவேவாழ்கின்ற மந்திரிமாரைப்போலவே
பகலவன்றீறின்று மெந்தன்முன்னே ௪௩

அரசனும்தானிவென்றேயுரைத்தாலப்போ
அமைச்சனும்கிர்த்தனிமென்பதுபோல்
வரிசையாநீங்களும் சொல்கின்றனுமேயும்
வையகமேற்றுமோ மந்திரிகளே ௪௪

ஓரவஞ்சனைகள் தான்பேசும்பொல்லா
ஓதுவாதுர்க்குண மந்திரிகள்
கோரியேயெந்தன் குடிகெடுக்கவிப்போ
கூறுவதைப்போலவே வந்திரோதான் ௪௫

அன்னுளிருந்த மந்திரிகளைநீங்கள்
அன்னீதஞ்சொல்கின்றப் பாவிகளே
இன்னுளிலென்னைக் கெடுக்குமபடியாக
எங்கேயிருந்துமே வந்தீர்களோ ௪௬

மதுநூலிற்செல்லிய நீதியின்படியே
மாறுமல்யாரும் நடப்பதினுல்
மனுச்சோழனென்றுமே மெடுத்தாரப்பெயர்
மரிகிடயாதுமே நான்கமர்தேன் ௪௭

இப்போதுநீங்களும் சொன்னயத்திற்கு
இணக்கமேவயாரு நடப்பதினுல
தப்பிதமாகவே யதினுல்வரும்பேர்
தன்னையுஞ்சொல்லுவேன் கேட்டிடுவீர் ௪௮

எழுத்தறியாதவன் மேடின்மேலிச்சித்து
எடுத்துகமந்திட்ட வார்போலும்
செழிக்கயிருகண் ணில்லாதான்கண்ணாடியை
சூமந்துத்திரிந்த கதைப்பேலும் ௪௯

வாசனையரியன் மலர்சுமந்தாற்போலும்
வழங்குமிவ்வீண்பேரை கொண்டானென்று
பூதமேழுலகத் தாருமிழந்தென்னைப்
பேசிடுவார்களே யாதலினால் ௧௦௦

அருமையாகவேயிளங் கன்றையிழந்துமே
ஓயாவருந்தும் பசுவினிற்கு
ஒருமையுடனதின் குறைகளையுந்தீர்க்க
யுற்றதோர்சக்தி யில்லாதவனையான் ௧௦௧

இந்தப்பழியினைப் போல் யானும்நெடுநாளாய்
ஏங்கிலிருந்தி யருமையாக
விந்தையதாகவே பெற்றவென்புத்திரனை
விளக்கப்பழிக்குப் பழியாக ௧௦௨

இப்போதுகொன்றுவிடுவதே ஞாயம்
என்றுமேமன்னனுந் தானுரைத்து
மெய்ப்பெருங்களைவில்லபனென்கிற
மந்திரிதன்னையுந் தானழைத்து ௧௦௩

மனுச்சோழன் தன்குமாரனாகிய வீதிவிடங்கனை தேர்க்காலில் விடச்சொல்லல்.

வாராய்மந்திரி யென்னுடைபுத்திரன்
வீதிவிடங்கனை யிச்சணமே
நேராயழைத்துப்போய்க் கன்றிறந்திட்டதோர்
நடுவீதிதன்னிலே தான்கிடத்தி ௧௦௪

தேரின்மேலேறியுமே பேதிக்கொண்டுயவன்
தேகத்தில்சக்கிர மழுந்தும்படி
கோரியப்படியே யவனைக்கொலைசெய்து
கொப்பெனச்சேதி யுரைப்பயென ௧௦௫

அம்மொழிகேட்டுமே யருகிலிருந்தே
அமச்சர்நடுங்கி மனங்கலங்கி
கம்பிதமாகவே கண்ணீர்வாரப்பெருக
கையைமுறித்துமே நின்றார்கள் ௧௦௬

அப்போதுகலர் வல்லபனென்கிற
அமச்சனும்சிந்தை மிகக்கலங்கி
எப்படியிதற்கு யிசனையென்றுமே
எண்ணத்துமெண்ணி மனம்வாட ௧௦௭

வையோயிதுவெல்லைக [illegible] மையோ
வாகாய்முன்செய்த தீவினையோ

அரியேனென்றரசனு னைத்தன்னை
அவனுந்தடுக்க பயந்துபயந்து ௧௦௮

மன்னனைவணங்கி விடையதுபெற்றுமே
மந்திரி யவ்விடம் விட்டுமேபோ
என்னயிதற்குநான் செய்வேனென்று மேயங்கி
எண்ணுதுமெண்ணரி மனதுகுன்றி ௧௦௯

தத்திகள்ளாடி வழிநடந்துமனம்
தயக்கிமயக்கித் தியங்கியப்போ
சித்தபிரமையுங் கொண்டுமல்லோநின்று
செப்பியவேந்தனுக் கேபயந்து ௧௧௦

இக்கபாதகத்தை யெப்படிசெய்குவோம்
என்றுமேபித்தம் பிடித்தவன்போல்
சிந்தைக்கலங்கியே நின்றுயாலோசித்து
சித்தந்தெளிந்து யமச்சனப்போ ௧௧௧

வேந்தன்நமக்குமே தந்தையுமானதால்
வீதிவிடங்கன்தன் குற்றமதை
சொந்தமதாகவே நாமேற்றுக்கொண்டல்லோ
சோரமுயிரைக் கொடுத்திடுவோம் ௧௧௨

என்றுமனது துணிவுகொண்டுமப்போ
ஏகியேகன்று யிறந்திடத்தில்
நின்றுதன்னரையி லிருந்தவுடவாளை
நேராய்க்கையி லுறிவிக்கொண்டு ௧௧௩

தன்னுடகழுத்தில் வைத்தல்லோவூட்டியை
நயிரியமாக வரிந்துகொண்டு
பன்னியவுயிரும் பரந்தோடவப்போ
பார்மேலமச்சனுந் தான்விழுந்தான் ௧௧௪

அதுகண்டுசேவகர் வோட்டமாகவே டி
அரசனைக்கண்டு மிகத்தொழுது
பதரவேயிங்கு நடந்தசெய்திகளை
பயந்துமேவிண்ணப்பம் செய்தார்கள் ௧௧௫

கேட்டுமனுச்சோழன் சிந்தைகலங்கியே
கிடுகிடுவென்று யுடல்நடுங்கி
வாட்டமுடனிது வென்னபாவமென்று
வாடியேமன்னனு மேதுரைப்பான் ௧௧௬

மந்திரிகலா வல்லபனுமிப்போ
மனதினிலென்னமோ வெண்ணங்கொண்டு
விந்தையாகவென் மாண்டதுவேவெரு
வேடிக்கையாக விருக்கிறதே ககஎ

கன்றினால்வந்த கடும்பழியுமிப்போ
கணைநடக்குமே போதாதென்று
இன்றுநாமுங்கூட்டு வழிவைவைப்போமென்று
நீடுமனெஞ்சில் சிந்தித்தானே ககஅ

அரியவெனக்குமே நேரிட்டவிடரை
எல்லாமிவனு மறிந்திருந்தும்
எரியுங்கொள்ளிதன்னை யேதள்ளுவதுபோல்
எனக்குசகுனியு மானதுபோல் கக௯

நின்றெரியும் நெருப்பினிலேகொஞ்சம்
நெய்யைவிடுவதுப் போலாக
பூல[illegible]விடனக்கு யேவிட்டாகவும்
பொல்லாக்கொடுமையும் செய்தானே கஉ0

கப்பலுடைந்துக் கலங்கிப்போது
தெப்பமுங்கூட வுடைந்தாற்போல்
தப்பிதமாகவே கன்றின்பழியாலே
தவித்துமேயானுங் கலங்கையிலே கஉக

மந்திரிப்பழியும் வந்துமிப்போவென்னை
மாரவொட்டாமல் வளைந்ததுவே
இந்தவிதிக்குநா னென்னசெய்வேனையா
ஈசனுமிப்படி யெழுதினானே கஉஉ

எனக்குவந்த துன்பந் தனக்கென் றுயோசித்து
இரவும்பகலுமாய்க் காத்திருந்த
மனக்குறையில்லா மந்திரியையானும்
மரிசியெக்காலத்திற் காண்பேனே கஉங

ஐயோவிதனைக்கேட்டவர்களெல்லாம்
ஆ[illegible]தன்னை கொடுமையையோ
குப்பவேலிகொள்ளையுங் கொண்டவனைவிட்டு
குருக்கிட்டோன்மேல்பழி சொல்போலும் கஉச

கோலமாகக்கொண்ட பிள்ளையாரிருக்கையில்
கூலிவாங்கவந்த கோ[illegible]தன்னே

தாயியராங்கவுஞ் சொன்னதுபோலவே
தாங்கியப்பழிக் கென்னசெய்வேன் ௧௨௫

ஆவின்கன்றைக்கொன்றோ னரசன்மகனாக
அவனையும்விட்டுமே யப்பழியை
அமச்சன்மீதில்வைத்து யவனாய் வாங்கினான்
அநியாயக்காரனென் றேயிகழ்வார் ௧௨௬

என்றுமேமன்னனு மாலோசித்துமப்போ
இயம்பவொண்ணாதத் துயர் மிகொண்டு
தன்னுடமனதைத் தானே தேற்றியப்போ
தட்சணமரண்மனைத் தனக்குவந்து ௧௨௭

என்னாது மெண்ணியப்பொழுதவர்
என்னென்றுயோசனை செய்தாரும்
வண்மதாயிப்போ நாமேசென்றல்லோ
வாகாய்மனுநீதி யின்படிக்கு ௧௨௮

நாமேசென்றல்லோ ரமதுபுத்திரனை
நசிக்கிடத்தேர்காலி லேவிடுத்து
போமேயமச்சன் பழிக்காநம்மினை
போக்கிகொள்வோமென்று தீர்மானித்து ௧௨௯

புத்திரன்தன்னை யழைத்துக்கொண்டுமப்போ
போயல்லோகன்று யிறந்திடத்தே
சித்தமுடனங்கு நிறுத்துமென்றுமன்னன்
செப்பிடவப்போ குலஞ்சருக்கும் ௧௩௦

அப்படியேயவர் யழைத்துகொண்டேகியே
அப்பசுங்கன்று யிறந்திடத்தே
செப்பமுடனவர் நிறுத்திவைத்திருக்க
சீக்கிரம்மன்னன் ரதமேறி ௧௩௧

வேகமதாகவே தானடத்தியந்த
வீதியதேடியே வந்துநின்று
தாகமதாகவே குலஞ்சர்களைப்பார்த்து
தானவரப்போது மேதுரைப்பார் ௧௩௨

காலதாமதங்கள் செய்யாமலப்போ
கன்றையெடுத்துப் புரத்தில்வைத்து
[illegible]த்தில் வீதிவிடங்களை
கொண்டுவா த்துமென் [illegible]க்க ௧௩௩

அப்போகொலனுக்கு மனம்பதைத்துமே
ஆயர்ந்துமயங்கியே சிந்தையிலே
கொப்பென்றுவீதி விடங்கனும்பார்த்திலேலோ
கொல்லுஞ்சருக்கப்போது மே துரைப்பான் ௧௩௪

என்னுயிர்துணைக்கு நாத்தகட்டளைக்கு
ஏதுக்குநீங்கள் மயங்குகிறீர்
நன்னயமாய்க்கட்டளையின்படிக்கு
செய்துகொள்ளுமென்றுசொல்லி ௧௩௫

மாதாபிதாகுரு தெய்வமுதலோரை
மனதிலப்போது நானினைந்து
மேதமனுச்சோழன் செங்கோலும்நாளு
புகழாய்விலைபெற்றிருக்கவேண்டும் ௧௩௬

என்றெல்லாபாலனும் மிஷ்டதெய்வங்களை
எண்ணியேபிரார்த்தித்து கொண்டப்போ
நன்புறனைவடக்கு சிரசதைதலைவைத்தல்லோ
கவிழ்ந்துதன்னிலே தான்படுத்து ௧௩௭

காணதன்னிரண்டு கண்களைபுறமூடிக்
கருத்தினில்சிவ பெருமானையுமே
பூணவேதியானித்து யோகநித்திரையும்
புரிபவர்போலுமே தானிருந்தான் ௧௩௮

அப்போமனுச்சோழசக்ரவர்த்தியும்
ஆரண்டிதியானங்கள் செய்துக்கொண்டு
தெப்பெனதேரை நடத்திடவப்போது ௧௩௯
தானதுவேகமதாகவந்து

வீதிவிடங்கன்மேல் சக்கரமழுந்தி
வோமாய்கரகர வென்றோட
போதவனுடலங் குழம்பிஇன்னபின்னமு
பட்டுசக்குண்டு மேயிறந்தான் ௧௪௦

இந்தவதிசயங் கண்டெல்லாதேவர்கள்
எல்லோருமப்போது யேதுரைப்பார்
விந்தையிதுவென்ன யருமையாகப்பெற்ற
மைந்தனென்றுமெண்ணிப் பாராமல் ௧௪௧

புண்ணியந்தன்னை... வெண்ணறியகன்னடலே
புகழ்சபகர மூனைக்குண்டாக

என்றுனு நீடியே வாழ்கவென்றுவாழ்த்தி
எழிலாய்ப்பூமாரி யேபொழிந்தார் ௧௪௨

அந்ததருணத்தில் தேவதுந்துபியும்
அதிரவேயன்னைகருள் ளாரெல்லாம்
சிந்தையும்பிரமித்து யிப்படிக்கு நதி
செலுத்துமகாராஜன மன்னனைப பீம ௧௪௩

என்னதவம்செய்து யாமும்பெற்றுகொண்டோ
மென்றுமேமன்னனைக் கொண்டாடி
பின்னுமவர்களு டைமக்யேயோகே ன்றே
பேனை மனதோடு மேதுரைப்பார் ௧௪௪

அனபவீ இவிடங் கனெயக்காலம்
யாமுமேகண்ணுமேல பார்போமென்று
இன்பகண்ணீருடன் துன்பகண்ணீர்விட்டு
ஏங்கியேகுடிகளும் நின்றார்கள் ௧௪௫

இப்படிக்காகவே யிவர்களிருக்கையில்
ஏந்தலெனுமனுச் சோழரவர்
தப்பாமலமச்சன் பழிக்குப்பழியாகத்
தம்முயிர்கொடுக்கவே தான்துணிந்து ௧௪௬

தேரிலிருந்தவர் கீழேயிறங்கியே
தியாகரைமனதினில தியானஞ்செய்து
கோரியொருமன தாகவப்போவல்லோ
கொற்றவனுறுதி கொள்ளையிலே ௧௪௭

தியாகர் பிரசன்ன மாகுதல்,

அகவல்.

அப்போதுதானும் அருள்துக்கூர்ந் தீ
செப்பமாய்மன்னன் சிந்தைநாயகற் ற
எல்லாம்வல்ல இறையவன்வந்தா ன்
நல்லோர்க்கருளும் நாயகன்வந்தா ன்
முப்புரமெறித்த முன்னோன்வந்தா ன்
தப்பிலார்க்கருள்செயுந் தயாநிதிவந்தா ன்
வள்ளல்வந்தான் மகாதேவன்வந்தா ன்
எள்ளிலெண்ணெய்போல் இருப்பவன்வந்தா ன்
அன்பர்க்கருளும் ஐயன்வந்தா ன்
இ[illegible]அகற்றும் இறையவன்வந்தா ன்
முத்தொழில்ந[illegible]தும் முத[illegible]ந்தா ன்
பத்தர்கள்புக[illegible] பதத்[illegible]வந்தா. ன்

தேவர்கள்போற்றும் தியாகன்வந்தா ன்
மூவர்கள்வாழ்த்தும் முக்கண்ணன்வந்தா ன்

கும்மி.

என்றுமேயாவர்களுந் தொழுதகவப்போ
எழிலாய்தியாகர் விடையேறி
நன்றுறவேமனு சோழராசன்றன்முன்னே
நாதன் தரிசனந் தந்தருளி கசஅ

நன்னயமாகவே குளிர் தங்கவது
நயந்துத்தரு[illegible]கின்ற
புன்னகைக[illegible]டியே யாசனுக்குமப்போ
பூரிக்கும்படியாகவே யேதுசெய்தார் கசகூ

இல்லன்வுடம்பு முள்ளமுமுயிரும்
சேரும்படிக்குக் குளிரச்செய்து
வல்லவன்கருணை யென்னும்வெள்ளமது
வானாபதிமாகத்தப் பொழிந்ததும்பி கரு0

பெருக்கெடுத்தெல்லோ யொளிகெண்டோக்கியே
பேராம்மடதிரந் தோடுகின்ற
உருக்கமலர்போன்ற திருக்கண்களாலல்லோ
உமாபதியுமரு நோக்கஞ்செய்து கருக

அந்தவரசனுக் குண்டாயிருந்ததோர்
அரியவிடா முழுதுந்தீர்த்து
சிந்தைமகிழவே மன்னனுக்கப்போ துச்
சிவபெருமானுமே யேதுரைப்பார் கருஉ

என்னிடயிடத்தில் நம்பிக்கையுமன்பும்
இஷ்டமாய்வைத்து மனுநீதி
என்றுந்தவரா தரசாட்சிசெய்யும்
இயல்மனுச்சோழனே நீகேளாய் கருங

உத்தமனேநீ நடத்துகின்றநீதி
உலகோர்நன்று யறிந்துகொள்ள
சித்தமாய்நாமே யிவ்வாறுசோதித்தோம்
சிந்தையில்நீவேறு யெண்ணவேண்டாம் கருச

என்றுதிருவாய் மலர்ந்தருளியீசன்
இறந்துகிடக்கின்றக் கன்றினையும்
நன்றெனகலா வல்லுடன்றன்னையும்
நன்நீதி நீதி விடகன்னைய[illegible] கருரு

உயிரதுபெற்று யெழுந்திருக்கும்படி
உமாபதிகிருபை புதுபுரிய
வையமேலுமவரு முயர்மேற்றெரு...மே
பரனைவணங்கியே நின்றார்கள். ௧௫௬

அப்போதுயன்னைக ருள்ளவர்யாவரும்
அற்புதமற்புத மென்றெல்லோர
செப்பிதியாகரை தேத்திரஞ்செய்திதல்லோர்
சந்தைமகிழ்ந்து யிருக்கையிலே ௧௫௭

கன்றதுவட்போது கடவுளைவலம்
களிப்புடன்தாய்பசு யிட்டத்திற்செல்ல
நின்றமேர ஜனங்கள் கொண்டகளிப்பையும்
நவிலுவேன்கவனமாய் கேட்டிடுவீர் ௧௫௮

பண்ணியபூசை பலித்ததென்பார்
பாவங்களின்றே பறந்ததென்பார்
வண்ணமதாகவே சூரியகுலமும்
வாகாய்தோன்றிய தென்பார்சிலர் ௧௫௯

மிக்கவேசுகம் கிடைத்தென்பாசிலர்
மேலானநன்மையுண் டாச்சுதென்பர்
துக்கமிங்குறையும் தீர்ந்ததென்றேசொல்லி
துள்ளியேசிலர்கொண் டாடுவார்கள் ௧௬௦

கும்பிட்டதெய்வம் குருககவாதமென்று
கூறிசிலர்கூத் தாடுவாகள்
யெம்பெருமானே எதிர்பட்டப்போதிப்போ
என்னமுடியாது யென்பார்கள் ௧௬௧

ஒருவரையொருவர் கட்டிக்கொண்டுமப்போ
ஒருகாதமோடித் திரும்புவார்கள்
பெருகியகல்கம் தீர்ந்ததென்றுசிலர்
பேசியேகைகளை கொட்டுவார்கள் ௧௬௨

மகழதிலுள்ளதோர் ரோமங்களை சிலர்
முறுக்கிக்கொண்டேமுக மலர்ச்சியொடு
தகமையுடனவர் தங்கள்மெய்பூரித்து
தாப்பரனைத்தொழு தேற்றுவார்கள் ௧௬௩

பூணவேவாழ்வு வந்ததென் றசிலர்
பூரித்துயானைக் கொண்ட லவோ

வேணபேரிப்படி யவரவர்மனம்போ ற்கே
விளமயிலெகாழுதவர் ற்கைப்பே ௧௬௪

அப்போதுமனுச்சோழச் சக்ரவர்த்தியும்
அன்புடனியாகனா தெரிசித்து
செப்பமுடனப் பக ..யுக்கன்றையும்
ராயழைத்து வுபசரித்துடன் ௧௬௫

ல்லதோர்புல்லுா விடங்களில்மேய்த்துமே
..கதத ..ங்கும்படி
வல்லதே ..துங் கட்..னையிட்டுமே
வண்மை பருகவே யப்பொழுது ௧௬௬

மந்திரிகலா வல்லபன்றன்னையும்
பன்னாச்கட்டி யணைத்துக்கொண்டு
விந்தையதாகவே யமர்சனுக்குமுன்னே
விளங்கவேயப்போதுயே துரைப்பார் ௧௬௭

என்னுடபுத்திரன் பதிக்குயிடாகவே
வதவேயுன்னுயிர் தன்னையிந்த
கன்னியமுள்ள யமச்சனேயுன்னைபோல்
கசினிலெனக்கு வேருமுண்டோ ௧௬௮

என்றுயவனையுபசரித்துமப்போ
இனியவசன மொடுவாழ்த்தி
பின்புவிதிவி டங்கனென்றுந்தன்
புத்திரன்தன்னையு மேயெடுத்து ௧௬௯

மடியின்மீதினில் வைத்துக்கொண்டுமப்போ
மகிழ்வ ..முத்தமுந் தான்கொடுத்து
வடிவாய்மைந்தனை யுச்சிமுகர்ந்தல்லோ
வாசனைப்போது மேதுரைப்பார் ௧௭0

மைந்தனேயான்செய்த புண்ணியத்தால்வந்த
மகிழ்சியுள்ளயெந்தன் கண்மணியே
உந்தனுலல்லவோ யானுமேயிப்போது
உலகப்புகழுமே வுயர்வடைந்தேன் ௧௭௧

ன்றெலமன்ன னுபசரித்துப்பின்பு
மைந்திரிமன்னனுங் காருஞ்சேனைதான்
நின்றிட ..ளக்குள்ள
..ரசப்வ ..த்திய்பு.. ௧௭௨

எங்கள மங்க வர்த்திமுழங்க
யன்னகர் வீதி வலமேவந்து
பொங்கமதாகவே யஷ்டமங்கலங்கள்
புகழாயப்போதுந் தானுமல்லோ ௧௩௧

விந்தயதாக சுமங்கலிகளோடு
வேதியரமச்சர் முதலானோர்
சிந்தைமகிழவே வாழ்த்திபேமர்
செய்கைகளோடு யெதிர்கொள

அப்போதரண்மனைக் குள்ளதுசென்று
அன்புள்ளமனுச் சோழனவர்
செப்பமாய்வேதியர் விருந்தினர் தாவினர்
சேர்ந்தவுரவோர் முதலோர்க்கு ௧௩௨

அவரவர்களுக்கு தக்கவரிசைகள்
அன்பாய்செய்து மகிழவைத்து
தவமாங்கற்பு நிலையதுத்தவராத
தன்மனையாளும் மனங்குளிர ௧௩௩

மைந்தனைமாதுக்கு காண்பித்துபின்பு
மந்திரிமுதலானோர் புடைசூழ
சிந்தைமகிழவே சிவானுகிரத்தால்
சிங்காசனத்தின் பதியாகி ௧௩௪

பாருலகத்தை யெல்லாமேயல்லோ
சிறப்புடன்ஓர்குடை நிழலில்வைத்து
பேராதரனெறிப் படியேயரசாட்சி
பெட்புடன்செய்துமே தானிருந்தார் ௧௩௫

காருலவுமிந்த வீதிவிடங்கன் தன்
கட்சியாஞ்சரித்திர கும்மிதன்னை
பாருலகுயிதை படித்தவர்கேட்டவர்
இஷ்டமாயச்சிறப் பதித்தோர்வாழி. ௧௩௬

மனுச்சோழன் சரித்திரமென்னும்
வீதிவிடங்கன் கும்மி
முற்றிற்று.

---

13 95 118295

1419

உ

கடவுள்துணை.

ரிஜிஸ்டர் காபிரைட்.

விளம்பரம்.

——:o:——

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—"மனுச்சோழ சரித்திரமென்னும் வீதிவிடங்கன கும்மி" இந்நூலை செஞ்சி - ஏகாம்பரமுதலியாரவர்களால் எழுதப்பட்டுள்ள இதை சென்னை நாராயணமுதலி வீதி 52-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் வாணீவிலாச அச்சுக்கூடத்தலைவராகிய யானே சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு எனது அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டு, மஹாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்களது 1867ம்-வருஷத்திய 25 வது ஆக்ட்டு 20-வது செக்ஷன் 9-வது ருலின் பிரகாரம் "காபிரைட் ரிஜிஸ்டர்" செய்யப்பட்டிருக்கின்றபடியால் என்னுடைய உத்தரவின்றி இந்நூலை யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு.

☞ ஆ. இரத்தினவேலுமுதலியார்.

வாணீவிலாச அச்சுக்கூடத்தலைவர்.

——